**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்**

**அ.வ.எண்.272/2023**

நாள் : 04.06.2026

வா.சா.1 – ராமமூர்த்தி

<u>**பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி**</u>

1ம் பிரதிவாதியின் கணவர் வீராச்சாமி நாயக்கரின் தாயார் பெயர் ராஜம்மாள் ஆகும். ராஜம்மாளும், வீராச்சாமி நாயக்கரும் ஒரே ஊரில், ஒரே வீட்டில்தான் குடியிருந்துவந்தார்கள் என்றால் – சரிதான். தாவா சொத்துக்கள் சம்மந்தமான பட்டாக்கள் அனைத்தும் ராஜம்மாளின் கணவர் பெயரில் இருந்து வந்ததா என்றால் – இல்லை, வெங்கடசாமி நாயக்கர் வசம் இருந்தது. பாகப்பபிரிவினைக்கு பின்பு தபசில் சொத்துக்கள் சம்மந்தப்பட்ட பட்டாக்கள் அனைத்தும் வீராச்சாமி பெயரில் இருந்து வந்ததா என்றால் – அதுபற்றி எனக்கு தெரியாது. வீராச்சாமிநாயக்கரின் காலத்திற்கு பின்பு தபசில் சொத்துக்களுக்குரிய பட்டாக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதியின் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் – சரிதான். அதன் பிறகு 1ம் பிரதிவாதி தபசில் சொத்துக்களை விவசாயம் செய்தும், வீடு உள்ளிட்ட கட்டிடங்கள் கட்டியும் அனுபவித்து வந்தார் என்று சொன்னால் – சரிதான், 1 முதல் 7 இலக்க சொத்துக்களில் விவசாயம் செய்தும், 8, 9 இலக்க சொத்துக்களில் வீடுகட்டியும் அனுபவித்து வந்தார்.

என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.4 அறிவிப்புக்கான சங்கதிகள் அனைத்தும் என்னால்தான் வழக்கறிஞருக்கு தெரியபடுத்தி பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டது என்றால் – சரிதான். மேற்கண்ட வா.சா.ஆ.4

வழக்கறிஞரின் அறிவிப்பில் எந்த இடத்திலும் தாவா 10 மற்றும் 11 இலக்க சொத்துக்களைப் பொறுத்து கிரையம் செய்தது சம்மந்தமாக வில்லங்கசான்றிதழ் எடுத்து பார்த்துதான் தெரியவந்தது என்ற சங்கதியை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் – சரிதான். மேற்கண்ட இரண்டு இலக்க சொத்துக்களைப் பொறுத்து கிரையம் செய்யப்பட்ட காலத்திலேயே எனக்கு தெரியும் என்பதனால்தான் வில்லங்கசான்றிதழ் எடுத்து பார்த்தபின்புதான் 2011 ல் கிரையம் செய்தது தெரியவந்தது என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றுசொன்னால் – சரிதான். தபசில் சொத்துக்களைப் பொறுத்து உங்களது மனைவி எந்த காலக்கட்டத்திலும் எந்த துறை அதிகாரியிடமும் தன் பெயரில் பட்டா மாற்றப்பட வேண்டுமென்று மனு செய்ததில்லை என்றுசொன்னால் – சரிதான்.

உங்களது மனைவி உயிருடன் இருக்கும் காலகட்டத்தில் தபசில் சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் – சரிதான். உங்களால் தாக்கல் செய்யப்பட்ட Rejoinder அறிவிப்பான வா.சா.ஆ.11 ல் 2 வது பக்கத்தில் 3 வது பத்தியில் உங்களது மனைவி பெரும்போராட்டமே என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றும் அவர் எவ்வாறு போராட்டம் நடத்தினார் என்றால் – எனது மனைவி ஊர்பெரியவர்கள் மூலம் பாகம் பிரித்துகொடுங்கள் என்று கேட்டார். உங்களது மனைவி 2011 ம் வருடம் பிரதிவாதிகளிடம் உங்களுடைய தூண்டுதலின் பேரில் பாகம் கேட்டாரா என்றால் – கேட்டார். அதேபோல் 2020 லும் பாகம் கேட்டாரா என்றால் – ஆம், 2011 ம் வருடத்திலிருந்து கேட்டு கொடுக்கவில்லை என்பதனால் 2020 லும் கேட்டார். உங்களுடைய உடன்பிறந்த சகோரர் பெயர்

கிருஷ்ணமூர்த்தி என்றால் – சரிதான். உங்களது மனைவி தமிழில் கையொப்பம் செய்வாரா, ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வாரா என்றால் – தமிழில்தான் கையொப்பம் செய்வார். உங்களது மனைவியின் கையொப்பம் மற்றும் கைரேகையை பார்த்தால் உங்களால் அடையாளம் காட்ட இயலுமா என்றால் – கையொப்பத்தை அடையாளம் காட்ட இயலும். என்னிடம் காண்பிக்கப்படும் 2020ம் வருட ஜூன் 27ம் தேதிய உடன்படிக்கை பத்திரத்தில் உள்ள மூன்றாவதாக சாட்சி கையொப்பமிட்ட கிருஷ்ணமூர்த்தி த/பெ.குருசாமிநாயக்கர் என்பவர் என் உடன்பிறந்த தம்பிதான். ஆனால் அந்த கையொப்பம் போல்தான் அவர் கையொப்பம் செய்வாரா இல்லையா என்று எனக்குதெரியாது. மேற்கண்ட **உடன்படிக்கை பத்திரம் பி.வா.சா.ஆ.1**.

என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.1ல் இரண்டாவது சாட்சியாக கையொப்பம் செய்துள்ள ரா.ஆண்டாள் என்பது உங்களது மனைவியின் கையொப்பமா என்றால் – அது எனது மனைவியின் கையொப்பம் இல்லை. அதன் கீழுள்ள LTI/R.ஆண்டாள் என்று பதியப்பட்டுள்ள கைரேகை உங்களது மனைவியுடையதுதானா என்றால் – அதுபற்றி எனக்குதெரியாது. மேற்கண்ட கையொப்பம் உங்களது மனைவியுடையது இல்லை என்பதனை நிருபிப்பதற்கு கையெழுத்து நிபுணருக்கு மேற்கண்ட ஆவணத்தை அனுப்புவதற்கு தயாராக இருக்கிறீர்களா என்றால் – ஆம். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.17ல் 2வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ள நபர் எனது சகோதரர் கிருஷ்ணமூர்த்திதான் அந்த வா.சா.ஆ.17ல் இரண்டாவது உள்ள சாட்சி கையொப்பமும் பி.வா.சா.ஆ.1ல் மூன்றாவதாக சாட்சி கையொப்பம்

செய்துள்ள சாட்சி கையொப்பமும் ஒன்றாக இருக்கிறது என்றும், அது உங்கள் தம்பியினுடைய கையொப்பம்தான் என்றுசொன்னால் – அதுபற்றி எனக்குதெரியாது.

நீங்கள் நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கத்துடன் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றும், நீங்கள் தூய்மையான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் – சரியல்ல. உங்களது தூண்டுதலின்பேரில் 2011ம் வருடத்தில் உங்களது மனைவி 1ம் பிரதிவாதியிடத்தில் பாகம் கேட்டதன் காரணமாகதான் தபசில் சொத்துக்கள் 10, 11 அயிட்டங்களை 4ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கப்பெற்ற தொகையான பத்து இலட்சத்தை உங்களது மனைவியிடம்தான் கொடுத்தார் என்றால் – அது சுத்த பொய் ஆகும். அதன் பிறகு 2020ம் வருடத்தில் சொத்துக்களில் ஏற்பட்ட விலை ஏற்றத்தின் காரணமாக மீண்டும் உங்களது மனைவி 1ம் பிரதிவாதியிடம் சொத்துக்களில் பாகம்கேட்டு வந்தார் என்றால் – அது தவறு. எனவேதான் பி.வா.சா.ஆ.1 உடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் – அது சுத்த பொய் ஆகும். எனவேதான் உங்களது மனைவி அடிக்கடி பாகம் கேட்டு தொந்தரவு செய்யக்கூடாது என்ற அடிப்படையில் சாட்சிகள் முன்னிலையில் உங்களது மனைவியுடன் இந்த உடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றுசொன்னால் – அது சரியல்ல, எனது மனைவி குறைவாகதான் படித்துள்ளார் என்பதனால் அவர் தனியாக சென்று இந்த உடன்படிக்கை பத்திரத்தில் கையொப்பம் செய்ய வாய்ப்பில்லை.

நீங்கள் சொல்வது போல் உங்களது மனைவி தனியாக செல்லமாட்டார் என்பதனால்தான் உங்களது தம்பியை அவருடன்

அனுப்பிவைத்துவிட்டு மேற்கண்ட பி.வா.சா.ஆ.1 உடன்படிக்கை பத்திரத்தில் சாட்சியாக கையொப்பம் செய்த உங்களது தம்பியின் கையொப்பம் இல்லை என்று பொய்சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் – சரியல்ல. உங்களது மனைவிக்கும் உங்களுக்கும் 1975ம் வருடத்தில் நகைகள் எல்லாம் போட்டு வெகு விமர்சியாக திருமணம் நடைபெற்றதால் உங்களது மனைவி தபசில் சொத்துக்களைப் பொறுத்து வாய்மொழியாக பாகம் வேண்டாம் என்று விடுதலை கொடுத்ததனால் வீராச்சாமி பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்தபொழுதும், 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்தபொழுதும் நீங்களும், உங்களது மனைவியும் எவ்வித ஆட்சேபணையும் செய்யாமல் இருந்தீர்கள் என்றுசொன்னால் – அது சரியல்ல. ஆனால் நீங்கள் மீண்டும் நீங்களும் உங்களது மனைவியும் 2011ல் 10 மற்றும் 11 இலக்க சொத்துக்களைப் பொறுத்து நடைபெற்ற கிரையத்தின்பொழுது உங்களது மனைவிக்கு பத்து இலட்ச ரூபாய் கொடுத்தார் என்றுசொன்னால் – அது சரியல்ல. அவ்வாறே நீங்கள் மறுபடியும் 2020ல் உங்களது மனைவி மூலம் பாகம் கேட்டதனால் பி.வா.சா.ஆ.1 உடன்படிக்கை பத்திரத்தின்படி 26.07.2020ன் படி அவருடைய பாகத்திற்காக மீண்டும் பத்து இலட்ச ரூபாய் பெற்றுகொண்டுவிட்டார் என்றுசொன்னால் – அது சுத்தத பொய் ஆகும்.

மேற்கண்டவாறு உங்களது மனைவி தனது பாகத்திற்காக 2011லும் மற்றும் 2020லும் தொகை பெற்றுக்கொண்டபடியால் தற்போது தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு முரண்தடை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் – அது தவறு. உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு காலவரையறை தோசத்தால்

பாதிக்கப்பட்டுள்ளதால் நீங்கள் கோரியுள்ள பரிகாரம் உங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் – சரியல்ல. நீங்கள் உங்கள் தம்பி கிருஷ்ணமூர்த்தியுடன் நல்லமுறையில்தான் பேசி வருகிறீர்கள் என்றால் – சரிதான். நீங்கள் தற்போது சென்னையில் உள்ள உங்கள் வீட்டில் குடியிருந்து வருகிறீர்களா என்றால் – எனது மனைவி இறந்த பிறகு என்னுடைய மகனுடன் நான் குடியிருந்து வருகிறேன். எனவே நீங்கள் தாவா சொத்து சம்மந்தமாக தற்போது நீங்கள் அனுபவித்தில் இல்லை என்பதனால் செலுத்திய நீதிமன்ற கட்டணமும் தவறானது என்றால – சரியல்ல. தாவா வழக்கில் நீங்கள் கோரிய பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றுசொன்னால் – சரியல்ல. தாவா வழக்குமூலம் உங்களால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் – சரியல்ல. உங்கள் மனைவி தபசில் சொத்துககளைப் பொறுத்து தனது பாகத்திற்குரிய தொகையை பெற்றுகொண்டபடியால் உங்களது மனைவி உயிருடன் இருந்த காலம் வரை நீங்கள் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் தற்போது அவர் இறந்த பிறகு பணத்தாசையின் காரணமாக நீங்கள் 1 முதல் 3 பிரதிவாதிகளின் மீது இந்த வழக்கை நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் – அது தவறு. உங்களுடைய தவறான நடவடிக்கையால் கணவரை இழந்த 1ம் பிரதிவாதி மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார் என்றும் எனவே அவர் எந்த ஒரு பாகமும் உங்களுக்கு தரவேண்டியதில்லை என்றால் – சரியல்ல.

**மறுவிசாரணை**

நீங்கள் குறுக்குவிசாரணையில் பி.வா.சா.ஆ.1 உடன்படிக்கை பத்திரம் உங்கள் மனைவியால் ஏற்படுத்தப்பட்டதல்ல என்று மறுக்கிறீர்கள்

என்றுசொன்னால் – சரிதான். உங்களது மனைவி உங்களுடைய தூண்டுதலின் பேரில்தான் பாகப்பிரிவினை கேட்டாரா அல்லது அவராக பாகப்பிரிவினை கேட்டாரா என்றால் – நான் சொல்லிதான் கேட்டார், நான் தூண்டுதல் செய்யவில்லை. நீங்கள் 03.06.2026ம் தேதி குறுக்குவிசாரணையில் தபசில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இலக்க சொத்துக்களும் ஆதியில் வெங்கடசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ள விவரம் தவறு என்றுசொன்னால் – சரிதான், 1 முதல் 9 இலக்க சொத்துக்கள் வெங்கடசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டது, 10, 11 இலக்க சொத்துக்கள் எனது மாமியார் கூட்டுக்குடும்ப வருமானத்தை வைத்து கிரையம் பெற்றார்.

திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**/Sd/ S.K.Angalaeswari**
கூடுதல் மாவட்ட நீதிபதி,
விருதுநகர்.